Registrede at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 — National TAMIL DAILY — தேசிய தினசரி — தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 — யாழ்ப்பாணம், பிலவ வைகாசி 5 ஆம் நாள் துல்ஹஜ் 2 (18-5-61) வியாழக்கிழமை — இதம் 80

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!

இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை

உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்

பெங்களூர்-2.

# அவசரகாலச் சட்டம் மேலும் ஒருமாதம் நீடிப்பு

## 5 அங்கத்தினர் தீர்மானம்பற்றி திரு. பீலிக்ஸ் விளக்கம்

கொழும்பு, வியாழன்

**அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதம் நீடிக்கும் உத்தரவை நேற்று கவர்னர் ஜெனரல் விசேஷ கெஸட் மூலம் அறிவித்துள்ளார்.**

**1958-ம் ஆண்டு நடைபெற்ற சம்பவங்கள் மீண்டும் நாட்டில் ஏற்படக்கூடாதென்ற காரணத்திற்காகவே தீவு முழுவதும் மேலும் ஒரு மாதம் அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட்டிருப்பதாய் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பார்லிமெண்டில் கூறினர்.**

திருவாளர்கள் டட்லி சேனநாயக்கா, டபிள்யூ. தகநாயக்கா, ஜே. ஆர். ஜயவர்த்தன, கே. எம். பி. ராஜரத்தின, பிலிப் குணவர்த்தன ஆகியோர் கொண்டுவந்த ஒரு தீர்மானத்தின் மீது, பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா விளக்கிக் கூறுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

நாட்டில் நடைபெறும் ஒவ்வொரு உண்மையான நிகழ்ச்சிகளையும்பற்றி விரிவாக ஆராயவே நாங்கள் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளை நியமித்திருக்கின்றோம்.

அரசியல் கருத்துக்களில் இன்னும் வேறுபாடுகள் இருந்து வருவதினுல், பத்திரிகைத் தணிக்கையை மேலும் வைத்திருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

1958-ம் ஆண்டு நடைபெற்ற சம்பவங்கள் மீண்டும் ஒரு முறை ஏற்படக்கூடாது என்ற காரணத்துக்காகவே நாடு முழுவதும் இன்னும் ஒரு மாத காலத்திற்கு அவசரகால நிலைமையை நீடிக்க வேண்டியிருக்கிறது."

பண்டாரநாயக்கா கொலை பற்றிய அரசியல் அம்சங்களை ஆராய விசாரணைக் கமிஷன் சீக்கிரம் நியமிக்கப்படும் என்றும் திரு. பீலிக்ஸ் தெரிவித்தார்.

## 5 தென் கொரிய மந்திரிகள் கைது

ஸியோல், மே 17

தென்கொரியாவில் 5 முன்னை நாள் மந்திரிகள் கைது செய்யப்பட்டிருப்பதாய் புரட்சி ராணுவத்தினர் அறிவித்தனர்.

---

## அகில இந்திய வானெலி வெள்ளி விழா

புதுடில்லி, மே 17

அகில இந்திய வானெலியின் வெள்ளிவிழாக் கொண்டாட்டம் ஜூன்மாதம் 8-ம் திகதி புதுடில்லியில் சிறப்பானமுறையில் கொண்டாடப்படும்.

வானெலியின் விருத்திபற்றிப் பல நிகழ்ச்சிகள் இடம்பெறுவதுடன் மட்டுமன்றி விசேஷ முத்திரையும் வெளியிடப்படும்.

# ஊரடங்குச் சட்ட நேரம் குறைக்கப்படும்

## நேற்றைய பார்லிமெண்ட் விவாதத்தில் அறிவிப்பு

கொழும்பு, புதன்

**வடக்கு, கிழக்கு மகாணங்களில் அமைதி நிலவிவருவதால் ஊரடங்குச்சட்டநேரத்தைக்குறைப்பதுபற்றி அரசாங்கம் தீர்மானித்துள்ளது என திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா நேற்றைய பார்லிமெண்ட் விவாதத்தின்போது தெரிவித்தார்.**

அவசரகாலச் சட்டப் பிரகடனம் பற்றிய நேற்றைய விவாதத்தை திரு. டபிள்யூ. தகநாயக்கா ஆரம்பித்துவைத்தார்.

திரு. பீலிக்ஸ் பதிலளிக்கையில் அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்ட காரணத்தை எடுத்துச் சொன்னர். வடக்கு, கிழக்கில் ஸ்தம்பித்திருந்த நிர்வாகத்தை நடத்துவது, இரதக் களரி ஏற்படுவதைத் தவிர்ப்பது, அமைதியை நிலைநாட்டுவது ஆகியவற்றுக்காகவே அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டது எனக் கூறினர்.

"அநேகர் கொல்லப்பட்டதாகவெளிநாடடுப் பத்திரிகைகள் செய்திகளைப்பிரசுரித்திருந்தன. இது முழுதும் திரித்துக் கூறப்பட்டவிஷயமாகும். அவ்விதமான பாரதூரம் ஒன்றுமில்லை. ஓரிடத்தில் ஒரு பெண் கற்பழிக்கப்பட்டதாய் இச் சபையில் தெரிவிக்கப்பட்டது. அது சம்பந்தமாய் நான் விசாரணை நடத்தியதில் விஷயம் பொய் எனத் தெரிய வந்தது. வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இப்போது குழப்பமோ, வேறு அசம்பாவிதமோ இல்லை என்பதால்தான் அரசாங்க அறிக்கை நிறுத்தப்பட்டிருக்கிறது" என்றும் திரு. பீலிக்ஸ் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் எவ்வித பேதமுமின்றி தமிழ் உரிமைக்காக ஒற்றுமைப்பட்டு விட்டார்கள் என டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வா பேசும்போது கூறினர். "தமிழ்ப் பேசும் முஸ்லிம்களும் கூட அவர்களுடன் ஒன்று சேர்ந்து விட்டார்கள். நியாயமான முறையில் தமிழ் மக்களுக்குக் கிடைக்கவேண்டிய உரிமையை அரசாங்கம் கொத்தாகவேண்டும். இதற்குப் பின் என்ன? இந்தியாவிலும் இதே போன்ற கிளர்ச்சிதான் இருந்தது. இறுதியில் அங்கு நடந்ததென்ன? நாடு இரண்டாகப் பிரிந்தது. வடக்கு, கிழக்கு மாகாணத்தில் அமைதி நிலவுகிறது, நிர்வாகம் சீர்ப்பட்டுவிட்டது. ராணுவம் ரோந்து சுற்றிவருகிறதுஎன்று அரசாங்கம் கூறுகிறது. அப்படியானல் ஏன் அவசரகால நிலையை அமுலில் வைத்திருக்க வேண்டும்? அவசரகாலம் என்னும் சர்வாதிகார ஆட்சியில் எல்லாம் அமைதியாக இருக்கும்.

அமைதி ஏற்பட்டுவிட்டால் அவசரகால நிலை ஏன்? சமஷ்டிக்கட்சியின் கொள்கையை நாங்கள் ஏற்கவில்லை. அவர்கள் கோட்டை எனப்படும் தொகுதிகளில் போட்டியிட்டவர்களும் நாங்கள்தான். ஆனல் மக்களின் உரிமை மறுக்கப்படக் கூடாது. நீதிஸ்தாபன மசோதா திருத்தம் கொண்டுவரவேண்டுமென்ற கருத்தை வலியுறுத்துகிறேம்" என்றும் டாக்டர் கொல்வின் கூறினர்.

திரு. தகநாயக்கா பேசும்போது குறிப்பிட்டதாவது:-

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அநேகசம்பவங்கள்பற்றி செய்திகள் வந்தன. இவை உண்மையானல் அடக்குமுறை பிரயோகிக்கப்படுகிறதென்றே கருதவேண்டும்.

நியாயம், நிதானம், பெருந்தன்மையுடன் நடந்து இப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும். சமாதானத்தையும், சௌஜன்யத்தையும் ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும், 38 வருடங்களுக்குமுன் சர் பொன்னம்பலம் இராமனுதன் நிதானமாக நடந்து எல்லா மக்களுடைய நம்பிக்கையையும், நல்லெண்ணத்தையும் எப்படிப் பெற்றுரோ அதை நினைவு கூர்வது நல்லது.

(எல்லாப் பேச்சுக்களும் ஆங்கிலத்தில் நடைபெற்றன.)

---

# கிடைக்கும் சலுகைகளை தமிழர் ஏற்கவேண்டும்

## இலங்கை மொழிப் பிரச்சினை பற்றி ராஜாஜி அறிக்கை

கொழும்பு, வியாழன்

மொழிப்பிரச்சினையில் இலங்கை சர்க்கார் அளிக்க முன்வரும் சலுகைகளை இப்போது ஏற்றுக்கொள்வதுதான் புத்திசாலித்தனமானது என ராஜாஜி நேற்று விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருக்கிறர். இப்போது தடுப்புக்காவலில் உள்ள தமிழரசுத் தலைவர்கள், விடுதலையானபின் மேல்நடவடிக்கை எடுப்பதற்குக் குந்தகமில்லாதவாறு அச்சலுகைகளை தமிழர்கள் இப்போது ஏற்பது தான் விவேகம் என்றும் ராஜாஜி தம் அறிக்கையில் கூறியிருக்கிறர்.

இந்தியப் பாராளுமன்ற அங்கத்தினர் திரு. கே. டி. கே. தங்கமணி கும்பகோணத்தில் மோட்டார்தொழிலாளர் கூட்டமொன்றில் பேசும்போது இலங்கைப் பாஷைப்பிரச்னை பற்றி ஸ்ரீமதிபண்டாரநாயக்காவின் அரசாங்கத்திற்கெதிராய் தொழிலாளர் இயக்கம் இந்தியாவில் செயல்படவில்லை என்றும் அத்தகைய நடவடிக்கைக்கு ஊக்கமளிக்கக்கூடாதென்றும் கூறினர்.

---

## 6 கோடி ரூபாய் பட்டு ஏற்றுமதி

புதுடில்லி, மே 17

அடுத்த ஆண்டு 6 கோடி ரூபாய் பெறுமதியான பட்டுத் துணிகளை இந்தியா ஏற்றுமதி செய்யும்என அறிவிக்கப்படுகிறது.

---

## கிருஷ்ணமேனன்

ஜெனிவா, மே 17

ஜெனிவா மகாநாட்டுக்கு இந்தியத் தூதுகோஷ்டியின் தலைவராகச் சென்றிருக்கும் திரு. கிருஷ்ணமேனன் வருகிற வெள்ளிக்கிழமை இந்தியா வந்து மீண்டும் ஜெனிவா திரும்பத்திட்டமிட்டிருக்கிறர்.

## பட்டினசபை ஊழியர்களுக்கு மாதாந்தப் பென்ஷன்?

ஜாஎலை, மே 17

ஜாஎலை பட்டின சபையில் வேலைபார்த்து, ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு மாதாந்தம் பென்ஷன் வழங்குவதென ஜாஎலைப் பட்டின சபைத் தலைவர் திரு. சிறில் சில்வா தீர்மானித்துள்ளார்.

தற்சமயம், இந்த ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு வருடாந்தப் பென்ஷன் மட்டுமே வழங்கப்பட்டுவருகின்றது.

ஸ்தலஸ்தாபன மந்திரியிடமிருந்தும், நீதி மந்திரியிடமிருந்தும் அங்கீகாரம் பெற்ற பின்னர் இந்தத் திட்டத்தை அமுலாக்கி, செயல்படுத்துவதென்று சபை தீர்மானித்துள்ளது.

---

## 154 லட்சம் முத்துச்சிப்பிகள்

தூத்துக்குடி, மே 17

சமீபத்திய முத்துக்குளிப்பில் 154 லட்சம் முத்துச்சிப்பிகள் கிடைத்ததாக அறிவிக்கப்படுகிறது.

---

## டில்லியில் இலங்கை ஹைகமிஷன் கட்டிடம்

புதுடில்லி, மே 17

டில்லியில் இலங்கை ஹைகமிஷன் காரியாலயதுக்கான புதிய கட்டிடவேலைகள் ஆரம்பமாகியுள்ளன. இதற்கு 13,43,400 ரூபாய் செலவாகும் என அறிவிக்கப்பட்டது. இது சம்பந்தமான உபமான்யப் பிரேரணை பார்லிமெண்டில் கொண்டுவரப்பட்டது.

### மணிவாக்கு

அறிவு நம்மைப் பந்தங்களுக் குட்படுத்துகின்றது. பக்தியோ நமக்கு விடுதலை அளிக்கின்றது.
—பாரசீக ஞானி


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு வைகாசி மீ 5 வ. (18-5-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## தோட்டக் குழந்தைகள் கல்வி

தோட்டப் பள்ளிக்கூடங்களை அரசாங்கம் தேசியக் கல்வித் திட்டத்திற் சேர்த்துக்கொள்ள வேண்டுமென இங்கு நேற்று எடுத்துக் காட்டியிருந்தோம். இலங்கையில் உள்ள தோட்டங்களின் தொகை 2000. ஆனால் 900 பள்ளிக்கூடங்களே தோட்டக் குழந்தைகளுக்கென நிறுவப்பட்டிருக்கின்றன. இப் பள்ளிக்கூடங்களில் 78 ஆயிரம் பிள்ளைகள் கல்விபயில்கின்றனர். இன்னும் ஒன்றரை லட்சம் பிள்ளைகள் கல்வி வசதியின்றியிருக்கின்றனர்.

தோட்டப்பள்ளிக் கூடங்கள் பெயரளவில் பள்ளிக்கூடங்களேயன்றி இங்கு எவ்வித வசதிகளும் இல்லையென இப் பள்ளிக்கூடங்களை நேரிற் பார்த்தவர்கள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றனர். 1904 ஆம் ஆண்டில் பரோஸ் என்பவர் தோட்டப் பள்ளிக்கூடங்களை நேரிற்பார்த்து அவற்றைச் சீர்படுத்த வேண்டிய வழிமுறைகளைத் தமது அறிக்கையில் விபரமாகக் கூறியிருந்தார். 57 ஆண்டுகள் ஓடி மறைந்தபோதிலும் தோட்டப் பள்ளிக்கூடங்கள் எவ்வித மாற்றமுமின்றி இருந்தவாறே இருக்கின்றன.

இந்த மனப்பான்மை ஏன்? தோட்டக் குழந்தைகள் நாடற்றவர்கள் என்ற எண்ணமா? அல்லது குடியுரிமைப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணும் வரை தோட்டப் பள்ளிக்கூடங்களை எடுப்பதில்லை என்பது அரசாங்கத்தின் நோக்கமா? 1945 ஆம் ஆண்டிலேயே தோட்டப் பள்ளிக்கூடங்களை ஏற்றுக்கொள்ளுவதென அரசாங்கம் தெரிவித்திருந்தும் இன்றுவரை அத்துறையில் ஒன்றுமே செய்யவில்லை. உதவி நன்கொடை பெறும் பள்ளிக்கூடங்களை இப்போது எடுத்துள்ள அரசாங்கம் இத்திட்டத்தில்தானும் தோட்டப் பள்ளிக்கூடங்களைச் சேர்த்துக் கொள்ளாதிருப்பது ஏனோ?

'ஒரே முறையான தேசியக் கல்வித்திட்டத்தை மேற்கொள்வதானால் சகல உதவிபெறும் பள்ளிக்கூடங்களையும் எடுத்து ஒரே நிர்வாகத்தில் அமைப்பதுதான் ஏற்ற வழி. தேசியக் கல்வி முறையில்தான் நாட்டின் முன்னேற்றம் தங்கியிருக்கிறது.' பணக்காரர்களின் குழந்தைகளுக்கும் ஏழைகளின் குழந்தைகளுக்கும் சமசந்தர்ப்பம் கிடைப்பது இத் திட்டத்தினால் சாத்தியமாகும். முன்னர் எல்லாம் பணக்காரர்களின் குழந்தைகளுக்கு மட்டுமே உயர்தரக் கல்வி ஏகபோக உரிமையாக இருந்துவந்தது. ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது.' இப்படி எல்லாம் சில மாதங்களுக்கு முன்னர் ஸ்தலஸ்தாபன, வீடமைப்பு மந்திரி திரு. மகாநாமசமரவீர இனிமையாகப் பேசியிருந்தார். தேசியக் கலவித்திட்டத்தில் எல்லாக் குழந்தைகளுக்கும் சம சந்தர்ப்பம் அளிக்கப் போவதாகக் கூறும் மந்திரியார் தோட்டப் பள்ளிக்கூடங்களை தேசியக் கல்வித்திட்டத்தில் சேர்த்துக் கொள்ள ஆவன செய்வாரென நம்புகின்றோம்.

வெளிநாடுகள் எல்லாம் இலங்கை மாணவர்களில் திறமையுள்ளவர்களுக்குப் பலவேறு துறைகளிலும் பயிற்சி பெறுவதற்கு உபகாரச் சம்பளங்கள் அளிக்கும்போது சொந்தநாட்டிலுள்ள தோட்டக் குழந்தைகளின் உரிமைகளை உதாசீனம் செய்வது தகாது. இலங்கையிலுள்ள பிள்ளைகள் அனைத்தையும் ஒரே கண் கொண்டு பார்ப்பதே அரசாங்கத்தின் கடமையாகும்.

தோட்டப் பள்ளிக்கூடங்களில் பயிலும் மாணவர்களுக்குப் பிற பள்ளிக்கூடங்களில் உள்ள வசதிகள் எதுவும் கிடையாது. 100 பிள்ளைகளை ஓர் ஆசிரியர் 'கட்டி மேய்க்க' வேண்டிய நிலையில் இருக்கின்றார். அந்த ஆசிரியரின் சம்பளமோ அவருடைய வயிற்றைக் கழுவுவதற்குத்தானும் போதாது. அன்றேல் கல்வித்துறையில் பயிற்சி மிக்கவர்கள் அப்பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களாகக் கடமையாற்றுவதுமில்லை. ஒரு கண்ணில் வெண்ணையும் மற்றக் கண்ணில் சுண்ணும்பும் தடவுவதுபோன்ற இச்செயல் எந்த நாட்டுக்கும் உயர்வளிக்க மாட்டாது.

இந் நிலையில் தேசியக் கல்விக் கமிஷன் மிகுந்த பொறுப்புடன் பணியாற்றவேண்டியிருக்கின்றது. தோட்டத்தில் உழைப்பவர்களின் குழந்தைகளும் இலங்கையில் உள்ள ஏனைய குழந்தைகளைப்போல் கல்வி அறிவு பெறும் உரிமை உடையவர்கள் என்பதை தேசிய கல்விக் கமிஷனுக்கு நாம் எடுத்துக் கூறவேண்டியதில்லை. தோட்டக் குழந்தைகளையும் இந்நாட்டுக் குழந்தைகளாகவே கருதி அவர்களுக்கும் மனித உரிமைகளை வழங்க இனியேனும் அரசாங்கம் முன்வர வேண்டும்.

# முதலாவது விண்வெளி விமானி பறப்பதற்கு செய்த ஏற்பாடு

— றெபேட் ஆர். கில்ருத் —

அமெரிக்காவின் முதல் விண்வெளி விமானி ஆலன் பி. ஷெப்பர்டு, ஒரு ஏவுகணையின் முகப்புக் கூண்டில் அமர்ந்த வண்ணம் விண்வெளி சென்று திரும்பினர் என்று சொன்னால் மட்டும் போதாது. பல ஆண்டுகள் அரும்பெரும் ஆராய்ச்சிகள், உழைப்பினல் பெற்ற அரிய சாதனை அது.

மாபெரும் முக்கோணக் கோபுரம் (பிரமிட்) ஒன்றின் உச்சியில் வைத்து அவர் விண்வெளிக்குள் செலுத்தப்பட்டார். பல்வேறு தனிப்பட்ட கம்பெனிகள் ஒன்றுசேர்ந்து மெர்க்குரி திட்ட ஊழியர்களுடன் கூட்டாக முனைந்து பாடுபட்டனர். மனிதன் விண்வெளியில் செல்வதற்கு முன்னேடிகளாக வழிகாட்டிய குரங்குகளையும் மறந்துவிடக்கூடாது,

### மூன்றாண்டு முயற்சி

வடிவம் மாறிக்கொண்டே வந்த இந்தக் கோபுர[illegible]ரிவான உறுதியான அஸ்தி[illegible]ரத்தின் மேல் உருவானது.

விடை காண வேண்டிய பல கேள்விகள் மெர்க்குரி ஊழியர்கள் முன்பு இருந்தன. விண்வெளி என்றால் என்ன? முதலில் பறப்பதற்கு எவ்வகையான விண்வெளிக்கப்பல் கட்ட வேண்டும்? அதனுள் என்னென்ன பாதுகாப்பு ஏற்பாடுகள் அமைக்க வேண்டும்? முதல் ஏவுதல்களின் போது எவ்வகை ஏவுகணைகள் பயன்படுத்தப்பட வேண்டும்?

விண்வெளியின் தன்மை, ஏவுகணைகள் செலுத்தும் பிரச்சினைகள் சம்பந்தமாக முதலில் அமெரிக்கா அனுப்பிய பல செயற்கை கோள்களும், விண்வெளி ஆராய்ச்சிகளும் பல கேள்விகளுக்கு விடைகள் கண்டன. ஆனால், இன்னும் எவ்வளவோ தெரியவேண்டியிருந்தது.

முதல் விண் வெளிக் கப்பலின் வடிவ அமைப்பு தீர்மானிக்கப்பட்டது. கோயில் மணி வடிவத்தில் அது இருக்கும். குறுகிய பக்கம் முதலில் விண்வெளியில் செல்ல வேண்டும். வெகு வேகத்தில் அது பூமியை நோக்கி திரும்பும்போது அகலமான அடிப்பாகம்முதலில்வாயு மண்டலத்தில் நுழையவேண்டும். காற்று உராய்வால் ஏற்படும் கொடிய வெப்பத்தினின்றும் தப்புவதற்காக இந்த ஏற்பாடு.

அடுத்து, விண்வெளி விமானிகள் யார் யார் என்ற பிரச்சினை. கல்வி, வயது, உடல் அளவு, பறக்கும் அனுபவம் இவற்றை அடிப்படையாகக் கொண்டு 69 சோதனை விமானிகள் வாஷிங்டன் நகருக்கு அழைக்கப்பட்டனர். அவர்களுக்கு மெர்க்குரி திட்டம் பற்றிக் கூறப்பட்டது. பத்துக்கு எட்டுப் பேர் பறக்க முன்வந்தனர். வரிசையாகப் பல பேட்டிகள் ஆலோசனைகளுக்குப் பின் ஏழு பேர் பொறுக்கி எடுக்கப்பட்டனர்.

இவையும் பிற முடிவுகளும் தீர்மானமான பின்பு, திட்டம் வெகு வேகமாக முன்னேறிற்று.

உரிய அளவுகளில் செய்யப்பட்ட சிறிய மாதிரி கப்பல்கள் மணிக்கு 18,000 மைல் வேகத்தில் காற்று வீசும் காற்றுக் குகைகளில்சோதிக்கப்பட்டன. கடுமையான அழுத்தம், குலுக்குதல், வெப்பம் இவற்றை அவை எவ்வாறு தாங்குகின்றன என்று கண்டறியவே இச் சோதனைகள்.

விண்வெளிக் கப்பலின் உறுப்புகள் செய்யப்பட்ட பின்பு அவற்றை அழித்துப் பார்த்து சோதித்து அவற்றின் திறன் அறிந்தார்கள். அவற்றின் குறைகளைக் கண்டு அவற்றை நீக்கி மீண்டும் சோதித்தார்கள். ஒவ்வொரு துணை ஏற்பாடும் பூர்த்தியாகும் வரையில், சோதனைகள் நீடித்துக் கொண்டே இருந்தன. முதல் தடவையாக இத்துணை ஏற்பாடுகள் இயக்கிப்பார்க்கப்பட்டன. கடுமையான சூழ்நிலைகளில் அவற்றை இயக்கிப் பார்த்தார்கள். கொடிய வெப்பம், கடும் குளிர், பெரும் குலுக்கல்களுக்கெல்லாம் அதை உட்படுத்தப்பட்டன.

துணை ஏற்பாடுகளைப் பொருத்திப் பார்த்து, மீண்டும் மேற்சொன்னதுபோலப் பலவகைகளில் சோதித்துப் பார்த்தார்கள். இறுதியாக முழு விண்வெளிக் கப்பல் உருவாகியது.

பறக்கத் தயார் என்று அறிவித்த பின்னரும் கூடக் கப்பல், மீண்டும் ஒரு வரிசைச் சோதனைக்குள்ளாயிற்று.

### விமானிகள் பட்டபாடு!

விண்வெளி விமானிகள் விண்வெளிப் பயணச் சூழ் நிலைகளுக்கு ஆயத்தப்படுத்துவதன் பொருட்டு அவர்களும் கடுமையாக நடத்தப்பட்டனர். சுழல் கருவிகளில் வைத்து சுழற்றப்பட்டனர். அவர்களை நுரை ரப்பர் இருக்கைகளில் வைத்துக் கடுமையாக அழுத்திப் பார்த்தனர். விண்வெளிப் பயணத்தின் மேல் செல்லும்போதும் கீழ் இறங்கும் போதும் நேரிடுவதை விடக் கடுமையான அழுத்தச் சோதனைகள் இவை விமானங்கள் அவர்களை விண்வெளிக்குத் தூக்கிச் சென்றன. 45 விநாடிகள் எடையற்ற நிலையில் அவர்கள் பறப்பதற்கான பயிற்சிகள் பெற்றனர். பாதுகாப்பான விண்வெளி உடுப்புகளை அணியச் சொல்லி, கடும் வெப்பத்துக்கும், குளிருக்கும் அவர்கள் உட்படுத்தப்பட்டனர். விண்வெளிக் கப்பல் வழியில் குட்டிக் கரணம்போட்டால் அதைச் சமாளிப்பதற்கான கரண சோதனைகளுக்கும் அவர்கள் உட்படுத்தப்பட்டனர்.

விண்வெளி விமானிகள் பயிற்சி இத்துடன் முடியவில்லை. விண்வெளிக் கப்பலிலுள்ள சிக்கலான இயக்கக் கருவிகளை கடுமையான சூழ் நிலைகளிலும் இயக்குவதற்கு அவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

பூமியில் சோதனைகள் நடத்தினல் மட்டும் போதாது. விண்வெளிக் கப்பலிலுள்ள கருவிகளின் திறன்கள் பற்றி அறிய மாதிரி கப்பல்கள் விண்வெளியில் செலுத்தப்பட்டன. குரங்குகள் அவற்றில் வைக்கப்பட்டு அவற்றின் வழக்கமாக வாசம் செய்யும் காட்டு மரங்களுக்கு மேல் வெகு உயரத்துக்கு அனுப்பப்பட்டன.

### குரங்குகள் உதவி

வெவ்வேறு வகை சூழ் நிலைகளில் மூன்று சோதனைகள் நடத்தப்பெற்றன. இவற்றில் இரண்டில் இரு குரங்குகள் வைத்து அனுப்பப்பட்டன. அவை இரண்டும் பத்திரமாகத் திரும்பின.

விண்வெளியை அனுப்புவதற்கு பயன் படுத்தப்படும் விசை உதவியுடன் உண்மையான விண்வெளிக் கப்பல் ஒன்று, ரெட் ஸ்டோன் ஏவுகணை உதவியால் ஹாம் என்னும் மனிதக் குரங்கை விண்வெளியில் 420 மைல் உயரத்துக்கு கொண்டு போயிற்று. மீட்கப்பட்டகப்பலிலிருந்து குரங்கை வெளியே எடுத்தபோது பல்லைக்காட்டிய வண்ணம் அது பாய்ந்து வந்து தன் பரிசான ஆப்பிள் பழத்தை வாங்கிக் கொண்டது.

மனிதன் அனுப்பப்படுவதற்கு முந்திய இறுதிச் சோதனைகள் ஒன்றில், அட்லாஸ் ஏவுகணை ஒன்று ஒரு விண்வெளிக் கப்பலை புதுமையான பாதையில் செலுத்திற்று. கப்பல் வாயுமண்டலத்துக்குள் மீண்டும் நுழைகையில் இக்கட்டான கோணத்தில் வருமாறு செய்வதற்காக வேண்டுமென்றே அப்பாதையில் அது செலுத்தப்பட்டது. விண்வெளிக் கப்பலில் மனிதன் செல்லும் போது எதிர்ப்படுவதை விடக் கடுமையான எதிர்ப்புகளையும் வாயு அழுத்தங்களையும் உராய்வு வெப்பத்தையும் அது தாங்கிக் கொண்டது.

# மேற்கு ஜெர்மனியில் தொழிலாளர் நிலைமை

எல்லா ஜனநாயக நாடுகளிலும் உள்ளதைப் போல மேற்கு ஜேர்மனியிலும் தொழிலாளக்கு வேலைநிறுத்தம் செய்யும் உரிமை உண்டு. இது மேற்கு ஜேர்மன் அரசியல் சட்டத்திலும் தெளிவாக்கப்பட்டிருக்கின்றது. ஜேர்மன் இராச்சியங்கள் தங்கள் அரசியலமைப்புகளிலும், வேலை நிறுத்தம் செய்வது, சட்டத்தினல் உட்படுத்த முடியாத அரசியல் உரிமை கொண்டது என்று குறிப்பிட்டுள்ளன. ஜேர்மன் தொழிற் சங்கங்கள் தொழிலாளரின் நலன்களையும் உரிமைகளையும் பாதுகாக்கப் பாடுபடுகின்றன.

ஜேர்மன் தொழிற் சங்க பெடரேஷனில் 16 தொழிற் சங்கங்கள் உள்ளன. 63 லட்சம் பேர் இவற்றில் அங்கத்தினர்களாக இருக்கின்றனர்.

சமீபத்தில் பிரசுரிக்கப்பட்ட புள்ளிவிபரங்கள் பின்கண்ட தகவல்களை வெளியிடுகின்றன. 1960-ல் 17,065 தொழிலாளர் 28 தொழில்களில் வேலைநிறுத்தம் செய்து 37,723 நாட்களை இழக்கச் செய்தனர். 2 கோடி மக்களுக்குமேல் வேலையில் இருப்பதால் தலைக்கு ஒருவருக்கான வேலைநேரம் 52 விநாடிகள் தாம். முன்னைய வருடங்களைவிட 1960 இல் நடைபெற்ற வேலைநிறுத்தம் மிகக் குறைவு. இது ஜேர்மனியில் தொழில் துறையில் நிலவும் இணக்கமான நிலையைக் காட்டுகிறது.

முதல் உலக மகாயுத்தத்தின் போதும், இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போதும் ஜேர்மனியில் பல வேலைநிறுத்தங்கள் நடைபெற்றன. 1958-ல் ஏற்பட்ட உலோகத் தொழிலாளர் வேலைநிறுத்தம் தொழில் துறை வரலாற்றில் ஒரு முக்கியதிருப்பமாகும். இது 86 தொழிற்சாலைகளைப் பாதித்தது. இதனல் 249 லட்சம் நாட்கள் இழக்கும்படியாயிற்று. பெடரல் தொழில் நீதிமன்றம், சமரச உடன்படிக்கையைமீறி உலோகத் தொழிலாளர் யூனியன் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டதால் தொழிலாளர் முதலாளிகளுக்கு நஷ்டஈடுதர வேண்டும் என்று தீர்ப்பளித்தது.

அன்று முதல் எல்லாப் பிரச்சினைகளிலும் முதலாளிகளும் தொழிலாளரும் கலந்து பேசி சமரச முடிவுக்கு வருதால், வேலைநிறுத்தம் தவிர்க்கப்பட்டே வருகிறது. ஏனைய நாடுகளில் இதே பிரச்சினைகள் மாபெரும் வேலைநிறுத்தங்களில் முடிந்திருக்கும் தொழிலாளரின் சம்பளம் பற்றிய விஷயத்திலும் ஜேர்மன் தொழிற் சங்கங்கள் வெற்றி பெற்றுள்ளன. 1960 இல் 136 லட்சம் தொழிலாளருக்கு சராசரி 9.4 சதவிகிதம் சம்பளம் அதிகரிப்பு கிடைத்துள்ளது.

## மாணவிகளுக்கு இடமில்லை

அளவை, மே 17

நாரமலை மத்திய கல்லூரியில் கல்வி கற்பதற்கு அரசாங்க உதவிச் சம்பளம் பெற்ற அநேக கிராம மாணவிகள், விடுதியில் போதிய இடமில்லாத காரணத்தினல், அவ் வசதியை பயன்படுத்த முடியாமல் இருக்கின்றார்கள்.

இம் மாணவிகள் 5-ம் வகுப்பிலும் ஜே. எஸ். சி. வகுப்பு தேர்வுப் பரீட்சையிலும் சித்தியடைந்ததினல் இவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

50 மாணவிகளைக் கொண்டு இயங்கும் விடுதி தற்சமயம் 80 மாணவிகளுக்கு இடவசதி அளித்துள்ளது. இதைத் தவிர இன்னும் 40 மாணவிகள்உபகாரச் சம்பபளம்பெற்றும் இடமில்லாத காரணத்தினல் வெளியிடங்களிலிருந்து கல்விபெற இப் பாடசாலைக்கு வரவேண்டியிருக்கிறது.

## மின்னல்தாக்கி இருவர் மரணம்

அநுராதபுரம், மே 17

அம்பகெகவெல என்ற இடத்திலுள்ள ஒரு வயலின் அருகாமையில் ஏற்பட்ட மின்னலின் தாக்குதலினல், மூன்று குழந்தைகளுக்குத் தாயான 24 வயதுள்ள சோமாவதி என்ற பெண்ணும் அவரது சகோதரரான ஹெரத் பண்டா என்பவரும் மரணமானர்கள்.

குடிசையொன்றில் ஏற்பட்ட இந்த மின்னல் தாக்குதலினல் அக்குடிசையும் இருவருடைய உடலும் தீக்கிரையானது.

# சிவில் சேவையை ஒழிக்க நடவடிக்கை

## அட்டோர்ணி ஜெனரலுடன் மந்திரி ஆலோசனை

கொழும்பு, புதன்

நிர்வாகச் சீர்திருத்தங்களின் வரிசையில், முதலாவதாக, இலங்கை சிவில் சேவையை ஒழிப்பதற்கான நடவடிக்கை சீக்கிரம் மேற்கொள்ளப்படும் எனத் தெரிகிறது.

சிவில் சேவையை ஒழிப்பது பற்றிய சட்ட நடவடிக்கைகள் பற்றி நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா அட்டர்னி ஜெனரலுடனும் பொது சேவைக் கமிஷன் தலைவருடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாய்த் தெரிகிறது.

சிவில் சேவையை ஒழித்த பின், எல்லா உயர்தர உத்தியோகங்களிலும் பிரவேசிக்கச் சகலருக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். சிவில் சேவை ஒழிக்கப்பட்டாலும் கூட, புதிய அமைப்பில் சிவில்சேவையாளர்களின் சம்பளம் மாற்றப்படமாட்டாது. அரசாங்க சேவையில் இப்போது 223 சிவில் சேவையாளர் இருக்கின்றனர். முதல் வகுப்பில் 34 பேரும், 2-ம் வகுப்பில் 129 பேரும், 3-ம் வகுப்பில் 60 பேரும் இருக்கின்றனர். கடைசி வகுப்பில் இருப்பவர்கள் குமாஸ்தாக்கள் சேவையிலிருந்து பதவி உயர்வு பெற்றவர்கள்.

### செய்திச் சுருக்கம்

பங்களூரில் 10 கோடி ரூபாய் செலவில் நகர விஸ்தரிப்பு விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

⁂ ⁂ ⁂

தூத்துக் குடி முத்துக் குளிப்பில் இந்திய அரசினருக்கு 2 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் கிடைத்துள்ளதாக அறியப்படுகிறது. 44 நாட்களில் 1,300 பேர்கள் இந்த முத்துக்குளிப்பில் ஈடுபட்டார்கள். இதில் ஒரு கோடியே 54 லட்சம் சிற்பிகள் கிடைத்துள்ளனவாம்.

⁂ ⁂ ⁂

திபேத்தின் மதத்தையும், கலாச்சாரத்தையும் காப்பாற்றும் வகையில் பல மடங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் இன்னும் பல மடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன என்றும் நிருபர்கள் கூட்டம் ஒன்றில் தலாய்லாமா பேசும் போது கூறினர்.

பண்டாரநாயக்கா வழக்கு

### ஜூரர்களுக்கு செலவுப்படி ரூ. 4130

கொழும்பு, புதன்

56 நாட்கள் நீடித்த பண்டாரநாயக்கா கொலை வழக்கில் பங்குபற்றிய 7 ஜூரர்களுக்கும் ரூ. 4130.65 செலவுப்படி அளிக்கப்பட்டிருக்கிறது. ஜூரர்களாகக் கடமையாற்றிய அரசாங்க ஊழியர்களுக்கு ஒரு நாளுக்கு 5 ரூபாய் வீதமும், விசேஷ வகுப்பு ஜூரர்களுக்கு அவர் முனிசிபல் எல்லைக்கு வெளியிலிருப்பின், தலா 12 ரூபாய் வீதமும், நகருக்குள் இருப்பவருக்கு தலா 6 ரூபாய் வீதமும் அளிக்கப்பட்டது.

### தொழிலாளி தாக்கப்பட்டார்

ஊர்காவற்றுறை, மே 17

சரவணைக் கிராமவாசி கிருஷ்ணபிள்ளை என்ற தச்சுத் தொழிலாளர் நேற்று மாலை வழிப்போக்கர் ஒருவரால் அடித்துத்தாக்கப்பட்டு ஊர்காவற்றுறை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இதுபற்றி ஊர்காவற்றுறைப் பொலிசாருக்கு புகார் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

### 30 லட்சம் தாகூர் நூல்கள் விற்பனை

மாஸ்கோ, மே 16

கவி தாகூரின் நூல்கள், ரஷ்யாவில் 30 லட்சத்துக்கு அதிகமாய் விற்பனை ஆகியிருப்பதாய்க் கூறப்பட்டது.

## நாட்டில் 4 லட்சம் ரேடியோக்கள் இருக்கின்றன

கொழும்பு, புதன்

நாட்டில் இப்போது லைசன்ஸ் பெற்ற சுமார் 4 லட்சம் ரேடியோக்கள் இருப்பதாய் இலங்கை வானொலி அதிகாரி ஒருவர் கூறினர். ரேடியோ கேட்பவர்களின் தொகை அதிகரித்து வருவதையே இது காட்டுகிறதென்றும், 1951-ம் ஆண்டில் 29,000 ரேடியோ செட்டுக்களே நாட்டில் இருந்ததென்றும் அவர் கூறினர்.

இதைத் தவிர, கொழும்பு, கண்டி, மொறட்டுவ ஆகிய இடங்களில் 12,251 "ரெடிபியூஷன்"கள் இருப்பதாயும் அவர் குறிப்பிட்டார்.

### சிட்டி கியூ. ஸி. முனிசிபல் லஞ்ச கமிஷனர்

கொழும்பு, புதன்

திரு. ஜார்ஜ்சிட்டி கியூ. ஸி. அடுத்தவாரம் முனிசிபல் லஞ்சக் கமிஷனராய்ப் பொறுப்பேற்பார். 14 முனிசிபல் அங்கத்தினர்களுக்கெதிராய் 18 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளது.

## "புல்பிரைட்" உபகாரச் சம்பளத்துக்கு விண்ணப்பம்

### மே 25 ம் தேதிக்குள் அனுப்ப கோரிக்கை

கொழும்பு, புதன்

அமெரிக்க "புல்பிரைட் ஸ்காலர்ஷிப்"புக்கான விண்ணப்பங்கள் கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியினால் கோரப்பட்டுள்ளன.

கீழ்க் கண்டவர்கள் மேற்கண்ட உபகாரச் சம்பளத்துக்குத் தகுதிபெற்றவர்களாவர்.

அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலைப் பட்டதாரிகள்;

1ம் தர, 2ம் தர, பாடசாலைகளின் அதிபர்களாக 5 வருடம் கடமையாற்றியவர்கள்;

பாடசாலைப் பரிசோதகர்களாக 10 வருடம் கடமையாற்றியவர்கள்.

கல்வி அதிகாரிகள் ஆகியோர் இம் மாதம் 25-ந் திகதிக்குள் விண்ணப்பங்கள் அனு[illegible]டவேண்டும். முழு வி[illegible]ரங்கள் இம் மாதம் 19ம் திகதி வெளியாகும் விசேஷ வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும்.

### சரவணையில் தபால் விநியோகம் சாத்தியமில்லை

ஊர்காவற்றுறை, மே 17

சரவணை உபதபாற்கந்தோரில் அக்கிராமத்திற்குரிய தபால்களை விநியோகிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்ற சரவணை கிராமமுன்னேற்றச் சங்கத் தலைவரின் வேண்டுகோள் சாத்தியமற்றது என வடபகுதி தபாற்துறை அத்தியட்சகர் அறிவித்திருப்பதாகத் தெரிகிறது.

நிர்வாகத்துறையில் பெண்களுக்கு உயர்தரப்பயிற்சி அளிப்பதற்காக மூன்ருவது ஐந்தாண்டுதிட்டகாலத்தில் வடநாட்டில் ஒரு நிலையமும் தென்னிந்தியாவில் மற்றொரு நிலையமும் நிறுவலாமென இந்திரா காந்தி கமிட்டி, அரசாங்கத்துக்குத் தெரிவித்துள்ளது.

### பௌத்த நாடுகளிடையே பொதுநல அமைப்பு

ஏற்படுத்துமாறு பிரதமருக்கு மகஜர்

கொழும்பு, மே 17

பௌத்த நாடுகளுக்கான ஒரு பொதுநல அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்ற புதிய கருத்தை இலங்கை பௌத்த சம்மேளனம் பிரதமமந்திரிக்கு சமர்ப்பித்துள்ளது.

இதற்கு முன்னேற்பாடாக லாவோஸ், வியட்னும் போன்ற பௌத்தநாடுகளின் இராஜீய நட்புறவுத்தொடர்பை பலப்படுத்த வேண்டுமென பிரதமரிடம் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் இச்சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

உலகில் பரந்துபட்டுக் கிடக்கும் பௌத்தமக்களின் கலாச்சார பொருளாதார அபிலாசைகளை ஒன்றுபடுத்தி இசைவு காண இப் பொதுநலஅமைப்பு வழிவகுக்குமென்றும் இவ்வமைப்பு ஆக்கத்தின்பின் ஒரு பௌத்த மாணவர் பொதுநல அமைப்புத்தினத்தை அங்குரார்ப்பணஞ் செய்யவேண்டுமென்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

## ஆஸ்பத்திரிகளில் கைலஞ்ச புகார்

### சுகாதார அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, மே 17

"அரசாங்க ஆஸ்பத்திரியில் கொடுக்கப்படும் மருந்துகள் இலவசமானவை, பணம் கொடுக்க வேண்டியதில்லை" என்ற அறிவித்தலை அரசாங்க ஆஸ்பத்திரிகளில் விளம்பரப் படுத்துமாறு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

நோயாளர்களுக்குக் கொடுக்கப்படும் மருந்துகளுக்குப் பணம் பெறப்படுவதாக அடிக்கடி புகார் செய்யப்படுவதாக சுகாதார சேவைகள் டைரக்டர் டபிள்யூ. ஏ. கருணரத்னவுக்குச் சுகாதார அமைச்சினல் அனுப்பப்பட்ட சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் கைலஞ்சம் அதிகரித்து வருகிறதென்றும், மருந்துகள் சம்பந்தமான நடைமுறை விதிகளைப் பொது மக்களுக்கு அறிவிக்கத் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இவ்வேற்பாடு திருப்தியான முறையில் அமைய வேண்டுமென்றும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

### ஜனதிபதி கென்னடி பற்றி இரு புதிய நூல்கள்

நியூயோர்க், மே 17

ஜனதிபதி கென்னடியின் தனி வாழ்க்கை பற்றிய இரண்டு நூல்கள் இந்த ஆண்டு இலையுதிர் காலத்தில் வெளியிடப்படும். பொதுவாக கென்னடி குடும்பத்தைப் பற்றியும் சிறப்பாக ஜனதிபதி கென்னடியைப் பற்றியும் ஒரு புத்தகம் படங்களில் உரைக்கும். அப்புத்தகம் ருபேட் ஜே. டோனுவன் எழுதியது. ஜனதிபதி கென்னடியின் போர்க்கால அனுபவத்தை அது எடுத்துரைக்கும்.

## மாணவர்கள் கவலை

### தொழில்நுட்பக் கல்லூரி பரீட்சை நடைபெறவில்லை

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி பிரவேச விண்ணப்பங்களோ அன்றி பிரவேசப் பரீட்சையோ இவ்வாண்டு இன்னும் நடைபெருததையிட்டு இக்கல்லூரியில் பிரவேசிப்பதற்காகக் காத்துக்கொண்டிருக்கும் மாணவர்கள் பலர் பெரிதும் கவலை யடைந்திருக்கிருர்கள் எனத் தெரிகிறது.

பிரவேச விண்ணப்பங்கள் மார்ச் மாதத்திலும் பிரவேசப் பரீட்சை ஏப்ரல் மாதத்திலும் நடைபெறுவதாக இருந்தபோதிலும் இம்முறை அவைகள் எதுவும் இதுவரை நடைபெறவில்லை. இதனல் ஜூன் மாதம் 6-ம் திகதி ஆரம்பிக்கப்படவேண்டிய புதிய வகுப்புகள் எதுவும் இவ்வாண்டு அத்திகதியில் தொடங்குவதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை.

கண்டி, கொழும்பு ஆகிய இடங்களிலுள்ள தொழில் நுட்பக் கல்லூரிகளில் சில மாதகாலத்துக்குமுன் நடைபெற்ற பரீட்சை இக்கனிஷ்ட பாடசாலையில் அக்காலத்தில் நடைபெறவில்லையாகையால் அப்பரீட்சை இன்னும் ஒரு சில வாரங்களுக்குள் ஆரம்பமாகலாமெனத் தெரிகிறது.

கோப்பாய் அரசினர் சிரேஷ்ட பாடசாலையில் இடம் பெயர்ந்திருக்கும் இப்பாடசாலை வகுப்புகள் அப்பாடசாலை வகுப்புகளினல் பாதிக்கப்படுவதாக தொழில் கல்லூரி மாணவர்கள் குறைபடுவதாகத் தெரிகிறது. இக்கனிஷ்ட தொழில் நுட்பப் பாடசாலை சென்ற மூன்று மாதகாலமாக ஒழுங்காக நடைபெறவில்லையென்பது தெரிந்ததே. கடந்த திங்கட்கிழமைதான் மீண்டும் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இக்கல்லூரியில் இப்படியான கஷ்டங்கள் ஏற்பட்டதனல் நீர்கொழும்பு, மன்னர், திருக்கோணமலை, மட்டக்களப்பு, மாத்தறை போன்ற இடங்களிலிருந்து வந்து இங்கு கல்விபயிலும் மாணவர்கள் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாகி வருகிருர்களென்று அறியப்படுகிறது.

மொணரு அன் ரோஸ் பப்படங்கள்

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு தனிஉளுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது

MONARA PAPPADAM

மொணரு அன் ரோஸ் பப்படங்கள்

மூவர்ண கலர் லேபிளுடன் மயில் — ரோஸ் அடையாள மிட்டு

ROSE FLOWER BRAND BEST PAPPADAM
REGD. TRADE MARK No 18255
A.M. BUHARI. 255, 5TH CROSS ST., COLOMBO.

இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்:

ஏ. எம். புகாரி அன் கோ

99, நாலாம் குறுக்குத் தெரு,

கொழும்பு.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தர வாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 10-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனும்.

**வைத்தியர் பரிபூரணநந்தர்,**
கைலாசபிள்ளையார் கோவிலடி.
யாழ்ப்பாணம்.



தாங்கள் விரும்பும் தகமையுள்ள மணமகன், மணமகள் தேவையா?

விபரங்களுக்கு:
**வி. வ. நிலையம்**
160, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.



### தேவை

ஓர் பிராமண குல உத்தியோகமான மணமகனுக்கு மணமகள் தேவை. ஆசிரியையாகயிருந்தால் விரும்பத்தக்கது. பின்வரும் விலாசத்திற்கு கடிதமூலம் விண்ணப்பிக்கவும்.

பெட்டி எண் ×19
ஈழநாடு
த. பெ. எண். 49
யாழ்ப்பாணம்.


# திருவுளச்சீட்டுமூலம் வீடுகட்ட கடனுதவி

## வீடமைப்பு அமைச்சின் திட்டம்

கொழும்பு, மே 18

வருட வருமானம் ரூ. 3,600க்குக் குறைவானவர்களுக்கே வீட்டுக் கடன் வழங்குவதென தேசிய வீடமைப்புப் பகுதி தீர்மானித்துள்ளது.

ஸ்தலஸ்தாபன வீடமைப்பு அமைச்சின் ஆலோசனைச் சபையில் இம்முடிவு செய்யப்பட்டது.

வீட்டுக் கடனுக்குக் கொடுப்பதற்கு இந்த இலாகாவில் 11 கோடியே 20 லட்ச ரூபாய் தான் கைவசம் உளது. இதில் 75 சதவீதமான கடன் கிராமவாசிகளுக்குக் கொடுக்கப்படும். ஆனல் ஒரு லட்சத்துக்கு மேலானோர் விண்ணப்பித்திருக்கின்றனர்.

வீடு திருத்துவதற்கும் பெரியளவில் வீடு அமைப்பதற்குமான விண்ணப்பங்களுக்கு முதன்மை அளிப்பதெனவும் இலாகா தீர்மானித்துள்ளது.

திருவுளச்சீட்டு முறையில் தெரிவு செய்யப்படவிருக்கும் விண்ணப்பக்காரர்களின் பெயர்கள் ஸ்தலஸ்தாபனச் சபைகளிலும் கச்சேரிகளிலும் பார்வைக்காக வைக்கப்படும்.

ரூபா 1,000க்கான கடன் 10 வருடங்களிலும் ரூ. 2000க்கான கடன் 15 வருடங்களிலும் 4 1/2 வீதம் வட்டியுடன் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும்.

## கொப்பரு விலையில் வீழ்ச்சி

கொழும்பு, புதன்

இவ்வார ஆரம்பத்தில் கொப்பரு விலை கண்டி ஒன்றுக்கு ரூ. 140 ஆக வீழ்ச்சியுற்றது. 6 நாட்களில் 9 ரூபாய் குறைந்ததைத் தொடர்ந்தே இவ்வித வீழ்ச்சி ஏற்பட்டது.

## 'கண்ணகி அம்மன்' பொங்கல் விழா

முள்ளியவளை, புதன்

வைகாசிப் பூரணையிலன்று நடைபெறவிருக்கும் பொங்கல் விழா, 'பாக்குத் தெண்டல்' என்னும் வைபவத்துடன் ஆரம்பமாகியது. வற்றுப்பளைக் கண்ணகி அம்மன் கோவிலைச் சேர்ந்த கட்டாடும் உடையார், எழு கிராமங்களுக்குச்சென்று, பாக்குகள் பெற்றுவரும் நிகழ்ச்சியே, 'பாக்குத் தெண்டல்' எனப்படும். மிகப் பழங்காலம் முதற்கொண்டே நடைபெற்று வரும் ஒரு வழக்கம் இது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7, பகல் 12-45, மாலை 6, இரவு 9)

**வியாழன் 18-5-61**

காலை 6-45 உதயகீதம் 6-50 சைவநற்சிந்தனை 6-55 இஸ்லாமிய நிகழ்ச்சி 7-15 தேர்ந்த இசை 7-30 திரைஇசை 8-00 வாத்தியஇசை 8-15 இஸ்லாமிய கீதங்கள்

பகல் 12-00 சித்திரகானம் 1-00 கதம்பஇசை

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள் 5-15 ஒலிப்பதிவுகள் 5-45 திரைஇசை 6-15 கிராமசஞ்சிகை 6-45 கிளாரினட்.

இரவு 7-00 ஐ. சிவஅன்பு - கதாப்பிரசங்கம் 7-45 நேயர் விருப்பம் 8-15 'வாழ்க்கைத் திரை' — நாடகம் 8-45 இஸ்லாமிய நிகழ்ச்சி 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்)

### திருச்சி

(செய்திகள் காலை 7-15, பகல் 2, இரவு 7-15)

காலை 7-00 இசைக்கதிர் 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள் 7-30 புதுக்கோட்டை ஜி. ஜயம் — பாட்டு

பகல் 12-00 தொழிலாளருக்கு 2-10 புதுக்கோட்டை ஜி. ஜயம் — பாட்டு

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்) 6-15 கிராமிய நிகழ்ச்சிகள்

இரவு 7-30 இம்மாதப்பாடல் 7-45 இராகம், தானம், பல்லவி மன்னார்க்குடி ராஜகோபால பிள்ளை — பாட்டு 8-40 திரைப்படஇசை 9-15 சுபத்த சங்கீதம் 9-30 அகிலபாரத சித்திரம்.

## நோர்வே மக்களுக்கு பிரதமரின் வாழ்த்துச்செய்தி

கொழும்பு, மே 17

இன்று கொண்டாடப்படும் நோர்வே நாட்டுத்தேசிய தினத்தையொட்டி, இலங்கைப் பிரதமர் திருமதி. சிறியா பண்டாரநாயக்கா, டில்லியிலுள்ள நோர்வே பிரதமர் மூலம் நோர்வே நாட்டு மக்களுக்கு வாழ்த்துச் செய்தியொன்று அனுப்பியுள்ளார்.




# தென் கொரியாப் பிரதமர் இன்னும் தலைமறைவாக இருக்கிறார்

## அமெரிக்கர் சிவில் அரசாங்கத்தையே ஆதரிக்கும்

### பார்லிமெண்டு தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டது

ஸியோல், மே 17

**தலைமறைவாய் இருக்கும் தென்கொரியாப் பிரதம மந்திரியையும், இதர மந்திரிகளையும் சரணடையும்படி புரட்சி இராணுவத்தினர் விடுத்த இறுதி எச்சரிக்கை பலனளிக்கவில்லை. பிரதமரும் அவர்களும் இன்னும் தலைமறைவாய் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.**

மந்திரி சபையினர் கைது செய்யப்பட்டதாய் முதலில் புரட்சி ராணுவக் கமிட்டி அறிவித்திருந்தது. ஆனால் இப்போது அவர்கள் தலைமறைவாய் இருக்கிறார்கள் என்பதை அது ஒப்புக் கொண்டு விட்டது.

பிரதம மந்திரி டாக்டர் ஜான்சங்கை அமெரிக்கா ஆதரிக்க வேண்டுமென வாஷிங்டனிலுள்ள தென் கொரியாத் தூதர் கேட்டுக் கொண்டிருக்கிறார். இதே சமயம், தென் கொரியாவில் அரசாங்கத்தை அமெரிக்கா தொடர்ந்து ஆதரிக்குமென அறிவிக்கப்பட்டிருக்கிறது. மக்கள் புரட்சியை ஆதரிக்கவில்லை என்றும், சீக்கிரம் அது தோல்வியடையும் என்றும் அமெரிக்காவிலுள்ள தென்கொரியத் தூதர் கூறியிருக்கிறார்.

3000 பேர் கொண்ட இராணுவத்தினரே புரட்சியை நடத்தினார்கள் என்றும், புரட்சித் தலைவர் இப்போது கடல் விமானப் படைகளின் ஆதரவைப் பெற முயற்சித்து வருகிறார் என்றும் செய்திகள் கூறுகின்றன.

ஸியோவில் இப்போது அமைதி நிலவுகிறது. வீதிகளில் துருப்புக்களின் நடமாட்டம் இல்லை. ஆனால் முக்கிய இலக்குகளில் மட்டும் ராணுவம் காவல் புரிகிறது. நாடு முழுவதும் ராணுவச் சட்டமும், முக்கிய நகரங்களில் ஊரடங்குச் சட்டமும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

பார்லிமெண்ட், தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

## அமெரிக்காவில் 13,676 நூல்நிலையங்கள்

நியூயோர்க், மே 17

அமெரிக்காவில் இப்பொழுது 13,676 நூல்நிலையங்கள் உள்ளன. அவற்றுள் 7,204 பொது நூல்நிலையங்களாகும்.

பொது நூல் நிலையங்களில் 721 நூல் நிலையங்கள் நகரமன்றங்களையும், கவுண்டிகளையும் சேர்ந்தவை. 3 கோடி அமெரிக்கர் நூல்களை இரவலாகப் பெற்று படிக்கின்றனர்.

## பட்டினியால் தவிக்கும் நாய்கள்

கோட்டயம், மே 17

கோட்டயத்தைச் சேர்ந்த உடும்பின்சோலை தாலுகாவில் அரசாங்கத்துக்குச் சொந்தமான காட்டு நிலங்களிலிருந்து ஆக்கிரமிப்பாளர் வெளியேற்றப்பட்டனர். இதன் விளைவாக நூற்றுக்கு மேற்பட்ட நாய்கள் அனாதையாகி விட்டன.

பட்டினியால் வாடிக்கொண்டிருக்கும் இந்த நாய்கள் வேறு இடங்களுக்குச் செல்ல வழியின்றித் தவித்துக்கொண்டிருக்கின்றன.

இந்த நாய்களை வளர்த்து வந்த ஆக்கிரமிப்பாளர்களை 40 மைலுக்கு அப்பாலுள்ள பகுதிக்கு மாற்றியபோது நாய்களை அவர்களுடன் அனுப்ப எவ்வித ஏற்பாடும் செய்யப்படவில்லை.

அடுத்த இரு வாரங்களில் 1,200 குடும்பங்கள் வரை வெளியேற்றப்படவிருக்கின்றன. அப்பொழுது மேலும் 500 நாய்கள் அனாதைகளாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# கென்னடி-குருஷேவ் வீயன்னாவில் சந்திக்கலாம்

வீயன்னா, மே 17

ஜனாதிபதி கென்னடியும், திரு. குருஷ்சேவும் வீயன்னாவில் சந்தித்துப் பேசுவதாய் இருந்தால், அதை வரவேற்பதாக ஆஸ்திரிய அரசாங்கம் அறிவித்துள்ளது. ஜனாதிபதி கென்னடி பாரிசுக்குச் சென்ற பின், வீயன்னாவில் குருஷ்சேவைச் சந்திப்பார் என ஒரு செய்தி கூறியதை அடுத்து, இவ்வாறு அறிவிக்கப்பட்டது. திரு. குருஷ்சேவ், ஜனாதிபதி கென்னடிக்கு நேற்று வாஷிங்டனிலுள்ள ரஷ்யத் தூதர் மூலம் ஒரு கடிதம் அனுப்பியிருந்தார்.

## கைத்தொழில் நூல் வெளியிட யோசனை

கொழும்பு, மே 17

நாட்டின் கைத்தொழில் சம்பந்தமான சகல விபரங்களையும் கொண்டதான நூல் ஒன்றை வெளியிட நடவடிக்கையெடுக்குமாறு கைத்தொழில் உள்நாட்டு கலாச்சார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயகா தனது அமைச்சுக்கு அறிவித்துள்ளார்.

## இளைஞனின் பரிதாப முடிவு

உடுப்பிட்டி, புதன்

வதிரி வடமத்திய கல்லூரி முன்னை நாள் முகாமைக் காரர் திரு. என். கனகசிங்கத்தின் கடைசிப் புதல்வனான தெய்வேந்திரன் பொதுத் தராதரப் பரீட்சையில் சித்தியெய்யத் தவறியதால் செவ்வாய் அதிகாலை நச்சுத் திராவகம் அருந்தி மரணமானார். பருத்தித்துறை மரணவிசாரணை அதிகாரி திரு. கே. தம்பிப்பிள்ளை தற்கொலையால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

## இலங்கைப் பிரஜைகள் பெயர் கொண்ட பதிவுப் புத்தகம்

### தயாரிப்பதுபற்றி ஆலோசனை

கொழும்பு, புதன்

இலங்கைப் பிரஜைகளின் பெயர்களைக்கொண்ட பதிவுப் புத்தகம் ஒன்றைத் தயாரிப்பதன் மூலம்தான், இலங்கைப் பிரஜைகள் அல்லாதவர்களின் பெயர்களைக்கொண்ட பதிவுப் புத்தகத்தை தயாரிக்கமுடியும் என சென்றவாரம் அரசாங்கத்தால் இலங்கை இந்திய பிரச்சினைபற்றி ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட கமிட்டி கருதுகிறது. எனவே, இலங்கைப் பிரஜைகளின் பதிவுப்புத்தகம் ஒன்றைத் தயாரிப்பது பற்றி அது ஆலோசித்து வருவதாய்க் கூறப்படுகிறது.

இக்கமிட்டி அமைக்கப்படுமுன் பிரஜைகள் அல்லாதவர்களின் பதிவுப்புத்தகம் ஒன்றைத் தயாரிப்பதென அரசாங்கம் தீர்மானித்திருந்தது.

# கருவாடு இறக்குமதியை இலங்கையரிடம் விடுக

## வர்த்தக மந்திரிக்கு இலங்கை கருவாட்டு சங்கம் மகஜர்

கொழும்பு, புதன்

கருவாடு இறக்குமம் உரிமையை இலங்கைக் கருவாடு வர்த்தகர் சங்கத்தைச் சேர்ந்த இலங்கையர்களிடம் மட்டுமே விட வேண்டும். அல்லது கருவாடு இறக்குமதியை அரசாங்கமே மேற்கொள்ள வேண்டும்" என இலங்கை கருவாடு வர்த்தகர் சங்கம் வர்த்தக மந்திரியைக் கேட்டுக் கொண்டிருக்கிறது

"அரிசிக்கு அடுத்தபடியாக கறுவாட்டுக்குத்தான் பெருந்தொகையான வெளிநாட்டுச் செலவாணி போகிறது. கறுவாட்டு இறக்குமதியை ஏகபோகமாகக் கொண்ட சில இலங்கையர் அல்லாதார், தங்கள் சொந்த நலன்களுக்கு இவ்வர்த்தகத்தைப் பயன்படுத்துகின்றனர். கருவாடு இறக்குமதியைக் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்திடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் சங்கம் ஒரு மகஜரில் கேட்டுக் கொண்டுள்ளது.

## குத்திக்கொலை செய்ததாய் வழக்கு

பருத்தித்துறை, புதன்

இளைய சகோதரியின் புருஷனை சின்னத்தம்பி செல்லத்துரை என்பவர் மீது மூத்த சகோதரியின் புருஷனை ஆறுமுகம் செல்லத்துரை என்பவரைக் குத்திக்கொலை செய்ததாக வல்வெட்டித்துறைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதிஸ்தலத்தில் விசாரணை செய்யப்பட்டது.

இறந்தவரின் மனைவி செல்லம்மாவும், பிள்ளைகளான இராசரத்தினம், இராசலிங்கம் ஆகியோரும் சாட்சியம் அளித்தனர்.

மிகுதி விசாரணை இம்மாதம் 29-ம் திகதிக்கு பின்போடப்பட்டது.

## நகை திருட்டுக்கு 2 வருட கடுங்காவல்

பருத்தித்துறை, புதன்

1500 ரூபாய் உட்பட 25 நகைகளையும் திருடியதாக முருகேசு இராசையா என்பவர் மீது தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி எதிரிக்கு இருவருடக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

இத்தீர்ப்பைஎதிர்த்து எதிரி அப்பீல் செய்திருந்தார். நீதிபதியின் தீர்ப்பையே அப்பீல் கோடும் எதிரிக்கு அனுப்பி வைத்துள்ளது.

# தாதிகளுக்கு உதவியாளர்கள் இனி திரட்டப்படமாட்டார்கள்

## ஆஸ்பத்திரி கங்காணிகளே அவ்வேலையைச் செய்வர்

கொழும்பு, புதன்

எஸ். எஸ். சி. தராதரம் பெற்ற இளம் பெண்கள், இனி தாதிகளுக்கு உதவியாளர்களாகத் திரட்டப்பட மாட்டார்கள் என்றும், ஆஸ்பத்திரியிலுள்ள பெண்கங்காணிகளிடமிருந்தே ஆர்கள் திரட்டப்படுவார்கள் என்றும் உதவி சுகாதார சேவைடைரக்டர் டாக்டர் சி. பொன்னம்பலம் கூறினர்.

பெண் கங்காணிகளுக்குப் பதிலாக தாதிகளின் உதவியாளர்கள் சுகாதார இலாகாவுக்குத் திரட்டப்பட்டனர். பல்வேறு ஆஸ்பத்திரிகளுக்கும் அவர்கள் அனுப்பப்படுமுன் அவர்களுக்கு 9 மாதப் பயிற்சி கொடுக்கப்பட்டது.

## மலாயா தூது கோஷ்டி

புதுடில்லி, மே 17

8 பேர் கொண்ட மலாயா பார்லிமெண்டரி தூதுகோஷ்டி இன்று துர்க்கர்பூரிலிருந்து கல்கத்தா வழியாக கோலாலம்பூர் பிரயாணமாகியது.

## 100,000 சாரணர்கள் திரட்டப்படுவர்

கொழும்பு, மே 17

இந்நாட்டிலுள்ள நகரப் பாடசாலைகளிலும் மற்றும் கிராமப் பாடசாலைகளிலுமுள்ள மாணவர்களில், 100,000 மாணவர்களை சாரணர் அங்கத்தினர்களாகத் திரட்டக் கல்விப்பகுதி உத்தேசித்துள்ளது.

சாரணர் படையில் சேர விரும்புவோர்களுக்கு ஊக்கமளிக்கும் நோக்கமாக இம்மாணவர்களுக்கான உடைகளை இலவசமாக வழங்குவதென்றும், இதற்காகச் செலவிடப்படும் தொகையை அரசாங்கத்திடமிருந்து ஒரு நிதியாகத் தரும்படி கல்விப்பகுதி கேட்குமென்றும் தெரிகிறது.

இளைஞர்களுக்குள் பரவி வரும் குற்றங்களைத் தடுப்பதற்கும், குற்றங்கள் தென்படாத ஒரு நாட்டைச் சிருஷ்டிப்பதற்கும் இச்சாரணர் வீரர்கள் பயன்படுத்தப்படுவார்கள் எனத் தகுதிவாய்ந்த ஒருவர் தெரிவிக்கின்றார்.

## அணுசக்தி மூலம் தாவர வளர்ச்சி

### அண்ணாமலையில் ஆராய்ச்சி

அண்ணாமலைநகர், மே 17

அணுசக்தியைப் பயன்படுத்தி தாவர வாழ்க்கையை ஆராய 1961-63க்கு ரூ. 20,000 செலவிடுவதற்கான ஒரு திட்டத்தை இந்திய அரசாங்கம் அணுசக்தி கமிஷன் சிபார்சு செய்திருக்கிறது. அண்ணாமலை பல்கலைக்கழக விவசாயப் பேராசிரியர் டாக்டர் ஜி. அரங்கசாமி தலைமையில் இந்த ஆராய்ச்சி நடைபெறும்.




கண் சம்பந்தமான வியாதியினால் கஷ்டப்பட்ட பல்லாயிரக் கணக்கானவர்களின் துயரை நீக்கி அவர்களின் நல்வாழ்த்துக்களைப் பெற்றுள்ளோம். ஒரு முறை கலந்தாலோசியுங்கள்!

மு.க.ஜெகநாதன்

யூனானி கண் வைத்தியநிபுணர்
பெரியகடை....யாழ்ப்பாணம்



தெய்வ வழிபாட்டிற்கும்
உங்கள் இல்லங்களில் நறுமணம் கமழ்வதற்கும்

33
303 ஊதுபத்திகளை
3003

உபயோகியுங்கள்.
யாழ்ப்பாணத்தில் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.

தயாரிப்பவர்கள்:
எஸ். வி. முருகேசன் அன் சன்ஸ்,
பெங்களூர்-2.

சோல் ஏஜண்டுகள்:
ஜெகஜோதி அன் கோ.
குருதெனிய.

# உள்நாட்டு சினிமாப்பட அபிவிருத்திக்கு

# 10 யோசனைகள்

## கலாச்சார மந்திரியிடம் சமர்ப்பித்த மகஜர்

கொழும்பு, புதன்

இலங்கையில் சினிமாத் தொழிலை அபிவிருத்தி செய்வது பற்றி ஒரு 10 அம்சத் திட்டம் அடங்கிய மகஜர் நேற்று கலாச்சார மந்திரி திரு. மைத்திரிபாலசேன நாயக்காவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

சினிமாத் தொழிலில் சம்பந்தப்பட்ட திரு. எஸ். டி. எஸ். சோமரத்ன இம் மகஜரைச் சமர்ப்பித்தார்.

இலங்கையில் சினிமாத் தொழில் இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளால் நசுக்கப்பட்டிருப்பதாய் மகஜரில் கூறப்பட்டுள்ளது.

கீழ்க்கண்ட 10 அம்சங்கள் அபிவிருத்திக்குத் தேவை என வற்புறுத்தப்பட்டது.

1. வெளிநாட்டு சினிமாப் படங்களுக்கான தீர்வையை அதிகரித்தல்.

2. கோட்டா முறையில் வெளிநாட்டுப் படங்களை இறக்குமதி செய்தல்.

3. குறிப்பிட்ட சதவிகிதமான உள்நாட்டுப் படங்களைத் திரையிடுமாறு உள்நாட்டு சினிமாக்களை நிர்ப்பந்தித்தல்.

4. உற்பத்தியாளர்களுக்கு 50 சதவிகித வசூலை அளித்தல்.

5. விநியோகஸ்தர்கள் 50 முதல் 60 சதவிகித உற்பத்திச் செலவை உற்பத்தியாளர்களுக்குமுன்பணமாகக்கொடுத்தல்.

6. உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள் ஆகியோரின் சம்மதமின்றி வெளிநாட்டுப் படங்களை "டப்" செய்யாமலிருத்தல்.

7. நவீன வசதியுள்ள ஒரு ஸ்ருடியோவை அமைத்தல்.

8. வெளிநாட்டு அரசாங்க உதவியுடன் தொழில் நுணுக்க நிபுணர்களைப் பயிற்றுவித்தல்.

9. உள்நாட்டு உற்பத்திக்கு வெளிநாட்டு மார்க்கெட்டுகளைத் தேடுதல்.

10. படஉற்பத்தி, விநியோகம், இறக்குமதி ஆகியனபற்றி பூரணமாக விசாரணைசெய்ய ஒரு கமிஷனை நியமித்தல்.

## அங்கோலா விஷயம்

லிஸ்பன், மே 17

அங்கோலாவில் போர்த்துக்கல் ரோந்து ராணுவக் கோஷ்டி ஒன்றின்மீது, தேசியவாதிகள் ஒளித்திருந்து தாக்கியதாயும், சேத விபரம் தெரியவில்லை என்றும் கூறப்படுகிறது. நல்லெண்ண அடையாளமாகப் பிரிட்டிஷ் போர்க் கப்பலொன்றைப் பிரிட்டன் அனுப்புவதைக் கண்டிக்கும் பிரேரணை ஒன்றைப் பார்லிமெண்டில் கொண்டுவரப் போவதாக எதிர்க் கட்சியான தொழிற்கட்சி அறிவித்துள்ளது.

## காமினுவில் பார்லிமெண்டை கூட்டுக

### ஹமர்ஷ்ல்டுக்கு கிஸங்கா கடிதம்

ஸ்டான்லிவில்லி, மே 17

காங்கோ பார்லிமெண்டை லியப்போல்ட் வில்லியில் கூட்டக் கூடாதென்றும், அங்குள்ள ஐ. நா. தளமான காமினுவில் கூட்ட ஏற்பாடு செய்யுமாறும் லுமும்பா ஆதரவு பிரதமர் திரு. கிஸங்கா, திரு. ஹமர்ஷீல்டுக்கு எழுதியுள்ளார்.

## மற்றோர் கொலைவழக்கு

பருத்தித்துறை, புதன்

ஏப்ரல் மாதம் 15-ம் திகதி துன்னாலையைச் சேர்ந்த இ. கந்தசாமி என்பவரை கத்தியால் குத்தி கொலைசெய்ததாக இராமலிங்கம் சுப்பிரமணியம் என்பவர் மீது தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதிஸ்தலத்தில் நேற்றைய தினம் விசாரிக்கப்பட்டது.

இறந்தவருடன் கூட துவிச்சக்கர வண்டிகளில் பிரயாணம் செய்தவர்களான ஆ. தனம், சீனியன், நடேசன் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

ஆ. தனம் தனது சாட்சியத்தில் எதிரி இறந்தவரை சைக்கிள் வண்டியில் இருந்து தள்ளி விழுத்திக் குத்தினர் என தெரிவித்தார்.

இம்மாதம் 29-ம் திகதிக்கு மேல் விசாரணை ஒத்[illegible]க்கப்பட்டது.

## இ.போ.ச. மாதம் ரூ. 800,000 இழக்கிறது

கொழும்பு, மே 17

தனிப்பட்ட 'வான்'களில் பிரயாணிகளைக் கட்டாயப்படுத்தி ஏற்றிக்கொண்டு செல்வதின் மூலம், மாதமொன்றுக்கு இலங்கைப் போக்குவரத்துச் சபை ரூ. 800,000 இழந்து வருகிறது என்று, இலங்கைப் போக்குவரத்துச் சபை புள்ளி விபரக் கணக்காளர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

இதற்கு முன்னர் மாதம் ஒன்றுக்கு இ. போ. ச. வுக்கு ரூ. 500,000 நஷ்டம் ஏற்பட்டதென கணக்கிடப்பட்டுள்ளது.

1958-ல் தனிப்பட்ட வான்களின் தொகை 2,900 ஆக இருந்ததென்றும் தற்சமயம் இத்தொகை 5,000 அதிகரித்துள்ளதாக புள்ளி விபரக் கணக்காளர்கள் தெரிவிக்கின்றனர்.

## நடு நிலைமை உச்சி மகாநாடு பற்றி பரிசீலனை

கெய்ரோ, மே 17

ஐக்கிய அராபியக் குடியரசு ஜனாதிபதி நாஸர், இந்தோனேஷிய ஜனாதிபதி சுகர்னோ, கினி அதிபர் டோரே ஆகியோர் நடுநிலைமை உச்சி மகாநாடு ஒன்றை நடத்துவதுபற்றி பரிசீலனை செய்ததாய் கெய்ரோ ரேடியோ அறிவித்தது.

## கதர் விற்பனையை பெருக்க இந்தியா முயற்சி

சென்னை, மே 17

மூன்றாவது திட்ட இறுதியில் ஆண்டு ஒன்றுக்கு இந்தியா முழுவதிலும் 40 கோடி ரூபாய் மதிப்புள்ள கதர் விற்பனை செய்யும் நிலை ஏற்படவேண்டும் என்று கதர், கிராமத் தொழில்கள் குழு, ஒரு தீர்மானம் செய்திருக்கிறது. இக்குழுவின் விற்பனை நிலையங்கள், பொருட்காட்சி ஆகியவற்றிற்குப் பொறுப்பாக இருக்கும்.

தமிழ்நாட்டிற்கான குறிக்கோள் ரூபா 4 கோடியேயாகுமென குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

தமிழ் நாட்டிற்கான குறிக்கோள் நிறைவேறினால் இம் மாநிலத்தில் 10 இலட்சத்துக்கும் அதிகமான மக்களுக்கு வேலை கிடைக்குமெனக் கருதப்படுகிறது.

## கடற்படை அதிகாரி விவகாரம்

### பார்லிமெண்டில் கேள்வி

கொழும்பு, மே 17

புகைப்படக்கருவி சம்பந்தமாக கடற்படை உதவிக் காப்டனை ரூபா 3,999 குற்றப்பணமாகச் செலுத்த வேண்டுமென்ற தீர்ப்பை எதிர்த்து அவர் செய்துகொண்ட எதிர்மனு முடிவடையவில்லையென்று சபை முதல்வர் திரு. சி. பி டி' சில்வா நேற்று சனப்பிரதிநிதிகள் சபையில் கூறினர்.

சுங்க இலாகா பிரதம கலக்டரால் தாக்கல் செய்யப்பட்ட இக் குற்றச்சாட்டில் உதவிக் காப்டனைக் குற்றவாளியாகக் கண்டு இக்குற்றப்பணம் விதிக்கப் பட்டது. அவர் முன்னரே இக்குற்றத்தை அனுபவித்து விட்டாராகையால் தொடர்ந்து எதுவித நடவடிக்கையும் எடுக்கத் தேவையில்லை என்றும் வேறும் 12 கடற்படை உத்தியோகத்தர் கடற்கொள்ளை காரணமாக தற்காலிகமாக வேலையினின்றும் நீக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

'கடற்படையிலுள்ள ஓர் உயர்தர அதிகாரிமேல் விதிக்கப்பட்ட இக்குற்றம் போதுமானதெனச் சபைமுதல்வர் கருதுகிறாரா?' என்று திரு. டட்லி சேனநாயக்கா கேட்ட கேள்வியொன்றுக்கு சபைமுதல்வர் பதிலளிக்கையில் தான் அதை பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சரின் பாராளுமன்றக் காரியதரிசியின் கவனத்துக்குக் கொண்டு வருவதாகத் தெரிவித்தார்.

## இளைஞர்களின் புதிய தீர்மானம்

யாழ்ப்பாணம், வியாழன்

அருவி வெட்டுதல், கொத்துதல் போன்ற வேலைகளை இளைஞர்கள் தாங்களே கூட்டாகச் சேர்ந்து செய்வதென்னும் தீர்மானமொன்று கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பண்ணைகம் தெற்கு ஸ்ரீமுருகன் இளைஞர் விவசாயக் கழகப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. அடுத்த மாதத்தில் கழக ஆண்டுவிழாவை நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது. கூட்டத்தில் திருவாளர்கள் எம். இரகுநாதன், பி. இராசகுரு, எஸ். இராசதுரை, எஸ். கனகரசன் ஆகியோரும் பேசினர்.

கூட்டத்திற்கு திரு. வி. துரைசிங்கம் தலைமை வகித்தார்.

## ஜெனிவா நிகழ்ச்சிகள்

ஜெனிவா, மே 17

அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. டீன்ரஷ்கும், சோவியத் வெளிநாட்டு மந்திரி திரு. குரோமிகோவும் இன்று சந்தித்துப் பேசுவார்கள். லாவோஸ் ஆஸ்திரியாவைப் போன்ற நடுநிலைமை நாடாய் விளங்கவேண்டுமென்பதில், ரஷ்யாவும் அமெரிக்காவும் கருத்து ஒற்றுமை கொண்டிருப்பதாய்க் காணப்படுகிறது.

## அஹமத் நகர் கோட்டைக்கு நேரு விஜயம்

அஹமத்நகர், மே 17

"வெள்ளையனே வெளியேறு" என்ற இயக்கத்தின்கீழ், தாம் மூன்றுவருடம் சிறைவைக்கப்பட்டிருந்த அகமத்நகர் கோட்டைக்குப் பண்டிட் நேரு விஜயம் செய்து, அங்கிருந்த ஒரு வேலைக்காரனுடன் படம் பிடித்துக் கொண்டார்.


தேவை

அலுமினிய பாத்திர வேலையில் அனுபவம் வாய்ந்த 'ஸ்பின்னேர்ஸ்' 'பொலிஷேர்ஸ்' (Spinners & Polishers) யாழ்ப்பாணத்தில் உள்ள யாழ் அலுமினிய தொழிற்சாலைக்குத் தேவை. உடன் விண்ணப்பிக்கவும். விண்ணப்பங்கள் 31-5-61 க்கு முதல் அனுப்பவும்.

மனேஜர்,
யாழ் மெட்டல் இன்டஸ்றீஸ்,
250, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

5-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெம்பிளி (கண்டி)

மற்றும் 8 திரைகளில்

மாலை 6 — இரவு 9-30 மணி

எஸ். எஸ். ராஜேந்திரன்
பி. சரோஜாதேவி, தங்கவேலு
மற்றும் பலர் நடித்த



மணப்பந்தல்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) காலை 10 மணிக்கும் 2மணிக்கும் இருகாட்சிகள்



எஸ். எஸ். ராஜேந்திரன் - பண்டரிபாய்
நடித்த
அன்பு எங்கே

மனோஹரா (யாழ்ப்பாணம்) 2-15 மணிக்கு ஒரே காட்சி

ஜெமினிகணேசன் - சாவித்திரி
நடித்த
மணமாலை


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு மே மாதம் 18 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.